**வாக்குமூலம்**

**16-வது கூடுதல் அமர்வு நீதிமன்றம், மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

அமர்வு வழக்கு எண்: 212/2025

வழக்கு சாட்சி: அ.சா.2

| | |
|---|---|
| பெயர் : கோபால கிருஷ்ணன் | முகவரி/கிராமம் : கதவு எண்.1/1, GN செட்டி ரோடு, மயிலாப்பூர், சென்னை-04 |
| தகப்பனார் பெயர் : பரமசிவம் | |
| வயது : 31 | |
| தொழில் : தனியார் நிறுவனத்தில் வேலை | தாலுக்கா : |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provision of Act 1873 on the 8th day of September 2025:

ஆதார் அட்டையின் நகல் மற்றும் காவல்நிலைய காவலரின் உறுதிமொழி ஆகியவற்றின் அடிப்படையில் சாட்சியின் அடையாளம் உறுதி செய்யப்பட்டது. சாட்சியின் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது**

ஆரம்பிக்கும் நேரம்:01:16:02 PM

நான் கதவு எண்.1/1, GN செட்டி ரோடு, மயிலாப்பூர், சென்னை-04 என்ற முகவரியில் வசித்துக் கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரி பூபதி மற்றும் தமிழரசை எனக்கு தெரியும். சாட்சி சலீம் என்பவரையும் எனக்கு தெரியும். 27.04.2024 அன்று மதியம் 1.30 மணிக்கு பாரிசிலுள்ள ஒரு பிரியாணிக்கடையில் பிரியாணி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது கடையின் வெளியே 2 நபர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். சலீம் என்பவரின் பாக்கெட்டிலிருந்து ரூபாயை எடுத்துக் கொண்டு அவரை பாட்டிலில் அடிக்க வந்தார்கள். அப்போது நானும், மற்றவர்களும் மடக்க சென்றோம். அப்போது எங்களையும் கற்களை கொண்டு

தாக்கினார்கள். பின்பு பொதுமக்கள் எல்லாம் கூடிவிட்டதால் அவர்கள் இருசக்கர வாகனத்தில் ஏறி தப்பி விட்டார்கள். பின்பு 29.04.2024 அன்று சி–1, பூக்கடை காவல் நிலையத்திலிருந்து அழைத்ததன் பேரில் காலை 10 மணிக்கு சென்று பார்த்தபோது அங்கே இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட எதிரிகள் பூபதி மற்றும் தமிழரசு ஆகியோர்களை பிடிதது வைத்திருந்தார்கள். அவர்கள் தான் சலீமிடம் சண்டைபோட்டு பாக்கெட்டிலிருந்த பணத்தை எடுத்தவர்கள் என்று அடையாளம் காட்டினேன். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down before me in open court read over to the witness and acknowledged by him to be correct.

Date: 08/09/2025 **XVI ADDL.JUDGE**